திருச்சி மத்தியசிறை சிறைக் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : ம. ஆண்டாள்

எண்.11109/பொ.1/2020 நாள் : 28.07.2022

பொருள் : சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை – மத்தியசிறை, திருச்சி — தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒருங்கிணைந்த சிவில் பணிகள் தேர்வு (குரூப்–4 பணிகள்) 2018–2019 மற்றும் 2019–2020 –ம் ஆண்டு – இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டது – பணி வரன் முறை செய்து தகுதி காண் பருவத்தில் வைத்து ஆணையிடுதல் – குறித்து.

பார்வை :
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண்.2454/PSD-1/2020, நாள்.30.05.2020
2. காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை, சென்னை குறிப்பாணை எண்.21780/இஎஸ்.1/2020–20, நாள்.24.07.2020.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.11109/பொ.1/2020 நாள்.03.08.2020.
4. வட்டாட்சியர், திருமங்கலம், மதுரை மாவட்டம் கடித மூ.மு.எண்.3082/2020/இ2, நாள்.22.09.2020.
5. உதவி இயக்குநர், அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், திருச்சி கடித ந.க.எண்.002513/அ.1/2019, நாள்.21.09.2020.

*****

பார்வை 3–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையினை தொடர்ந்து பின்வருமாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. இச்சிறையில் 03.08.2020 முதல் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.மு.செல்வகணேஷ் என்பவரது சாதிச்சான்று பார்வை 4–ல் காணும் வட்டாட்சியர், திருமங்கலம், மதுரை மாவட்டம் கடிதத்தில் இவரது சாதிச்சான்றிதழ் உண்மை தன்மை வாய்ந்தவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 5–ல் காணும் உதவி இயக்குநர், அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், திருச்சி கடிதத்தில் இவரது மேல்நிலை / இடைநிலை மதிப்பெண் சான்றிதழ் உண்மை தன்மை வாய்ந்தவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட திரு.மு. செல்வகணேஷ் என்பவர் பார்வை 2–ல் காணும் காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை, சென்னை ஆணையின்படி, இச்சிறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக இச்சிறையில் பணிநியமனம் செய்யப்பட்டவர் பணியில் சேர்ந்த நாளான 03.08.2020 முற்பகல் முதல் (சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை, சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுகளுக்குட்பட்டு) பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

3. தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர் பிரிவு 22 விதி 32 (எ) (1)–ன் படி இளநிலை உதவியாளராக பணிக்கு ஆஜரான 03.08.2020 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

4. மேலும், விதி எண்.34(அ) பிற்சேர்க்கை 5–ன் படி தகுதி காண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (District Office Manual) துறைத்தேர்வில் தேர்ச்சியும், பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் பயிற்சியில் தேர்ச்சியும் பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. இத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பின்னரே வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்படும் என்பதும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

5. இச்செயல்முறை ஆணையினை பெற்றுக்கொண்டமைக்கு பிரதி நகலில் ஒப்புதல் அளித்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம்/...
சிறைக்கண்காணிப்பாளர்,
மத்தியசிறை, திருச்சி–20.

பெறுநர் : திரு.மு.செல்வகணேஷ், இளநிலை உதவியாளர், மத்தியசிறை, திருச்சி
நகல் : கண்காணிப்பாளர் ஆணைப்புத்தகம் / பொ.1 இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

நிர்வாக அலுவலர்,
மத்தியசிறை, திருச்சி

29.7

Copa 5\E:\G 1\E\2022\G_1\Probation Declare\Selvaganesh, JA_Regularition.docx